- திருத்தக்க தேவர் நிலையாமை குறித்து எழுதிய நூல் நரிவிருத்தம்
- விருத்தப்பாவால் இயற்றப்பட்ட முதல் காப்பியம்
- சமணக் காப்பியம்
- மணநூல், காமநூல், முக்தி நூல் என்ற வேறு பெயர்களும் உண்டு
- வட மொழியில் உள்ள கத்திய சிந்தாமணி, சத்திர சூடாமணி என்ற இரு நூலையும் தழுவி எழுதப்பட்டது சீவக சிந்தாமணி
- காண்டப் பிரிவு இல்லை
- 13 இலம்பகங்களையும் 3145 பாடல்களையும் கொண்டது
- முதல் இலம்பகம் நாமகள் இலம்பகம்
- இறுதி இலம்பகம் முக்தி இலம்பகம்
- காப்பியத் தலைவன் சீவகன்
- சீவகன் சிந்தாமணியுடன் ஒப்பிடப்பட்டுள்ளான்
- சிந்தாமணி என்பது கேட்டதைக் கொடுக்கும் தேவலோகத்தில் உள்ள ஒரு மணி (ரத்தினம்)
- சீவகன் கல்வி கற்றதைக் கூறுவது நாமகள் இலம்பகம்.
- சீவகன் நாட்டைக் கைப்பற்றியதைக் கூறுவது மண்மகள் இலம்பகம்

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

சீவகன் ஆட்சி செய்ததைக் கூறுவது பூமகள் இலம்பகம்

சீவகன் வீடுபேறு அடைந்ததைக் கூறுவது முக்தி இலம்பகம்

- பதுமுகனுக்கு கோவிந்தையைத் திருமணம் முடித்தது கோவிந்தையார் இலம்பகம்
- பதுமுகன் சீவகனின் நண்பன்
- காந்தர்வதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை ஆகிய எட்டுப் பெண்களைச் சீவகன் மணந்தான்
- சீவகன் வீணைப் போட்டியில் வென்று முதலில் காந்தர்வதத்தையை மணந்தான்
- குணமாலையைச் சுண்ணப்பொடி தேர்வில் மணந்தான்
- பதுமையாரை விடம் மீட்டு மணந்தான்
- கனக மாலையைத் தடமித்தன் கொடுக்க மணந்தான்
- விமலையை அவள் தந்தையாகிய காகதத்தனின் பண்டங்களை விற்று மணந்தான்
- சுரமஞ்சரியை முதுமைக்கோலம் காட்டி மணந்தான்
- நூல் ஆசிரியரே சீவகனுக்குக் ‘காமதிலகம்’ எனப் பட்டம் சூட்டியுள்ளார்
- சீவகனின் பெற்றோர் சச்சந்தன் - விசயை
- நாடு ஏமாங்கத நாடு
- தலைநகரம் இராசமாபுரம்
- அமைச்சன் கட்டியங்காரன்
- சீவகனின் தந்தையான சச்சந்தனைக் கொன்றவன் கட்டியங்காரன்

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

- சீவகன் பிறந்த இடம் சுடுகாடு
- சீவகனை எடுத்து வளர்த்தவன் கந்துக்கடன் என்னும் வணிகன்
- சீவகனுக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர் அச்சணந்தி

சிறப்பு

- அனைத்துச் சமயத்தவரும் விரும்பிக்கற்ற சமணக் காப்பியம்
- சைவனான குலோத்துங்க மன்னன் விரும்பிக்கற்ற காப்பியம்
- நூல் முழுமைக்கும் சைவரான நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார்
- இவர் இருமுறை உரை எழுதினார் என்பர்
- சைவரான உ.வே.சா அவர்கள் முதன்முதலில் பதிப்பித்தார்.
- அவர் பதிப்பித்த முதல் நூலும் சீவகசிந்தாமணியே ஆகும்.
- கிறித்துவரான ஜி.யு. போப் இதனை இலியட், ஒடிசியுடன் ஒப்பிட்டுள்ளார்

* He is a prince among the Tamil Poets (**தமிழ்க் கவிஞர்களுள் இளவரசன்**) **என்று திருத்தக்க தேவரைப் புகழ்ந்து பாராட்டியவர் ஜி.யு.போப்**

## வளையாபதி

- ஆசிரியர் பெயர் தெரியவில்லை
- சமணக் காப்பியம்
- விருத்தப்பாவால் ஆனது
- முழுமையாகக் கிடைக்கவில்லை
- கிடைத்தவை 72 பாக்கள்

- மூல நூல் வைசிக புராணம் 35வது சருக்கம்
- நவகோடி நாராயணன் பற்றிய நூல்
- மடலேறுதல் பற்றிக் கூறும் காப்பிய நூல்
- ஒட்டக் கூத்தர் கவியழகு வேண்டி வளையாபதியை நினைத்தார் என்று தக்கயாகப் பரணியின் உரையாசிரியர் கூறுகிறார்

**சிறப்பு**

- இலக்கண இலக்கிய உரையாசிரியர்களால் மிகவும் போற்றப்பட்ட நூல்

## குண்டலகேசி

- ஆசிரியர் நாதகுத்தனார்
- காலம் 7ஆம் நூற்றாண்டு
- பௌத்த காப்பியம்
- சுருண்ட தலைமுடியை உடையவள் என்று பொருள்
- குண்டலகேசி விருத்தம், அகல கவி என்ற வேறு பெயர்களும் உண்டு
- நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை
- கிடைத்தவை 224 பாடல்கள்
- குண்டல கேசியின் வரலாற்றை நீலகேசி கூறுகிறது
- குண்டல கேசியின் இயற்பெயர் பத்திரை
- இராசகிருக நாட்டு மந்திரியின் மகள்
- குண்டலகேசியின் கணவன் காளன்; இவன் ஒரு கள்வன்

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

- குண்டலகேசி சாரிபுத்தரிடம் தோற்றுப் புத்தமதம் தழுவினாள்
- கலைஞரால் 'மந்திரி குமாரி' என்று திரைப்படமாக்கப்பட்டது.

## சிற்றிலக்கியத் தகவல்கள்

- சிற்றிலக்கியத்திற்குப் பிரபந்தம் என்ற பெயரும் உண்டு.
- பிரபந்தம் என்பது வடமொழிச் சொல்.
- பிரபந்தம் என்றால் நன்கு கட்டப்பட்டது என்று பொருள்.
- அறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப்பொருள் நான்கனுள் ஒன்று பற்றியோ சிலவற்றைப் பற்றியோ பாடுவது சிற்றிலக்கியம் (சிறுகாப்பியம் போல).
- தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் உள்ள புறத்திணையியலில் இடம் பெற்றுள்ள சில நூற்பாக்களே சிற்றிலக்கியங்கள் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்தன.
- சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தைக் கூறும் நூல்கள் பாட்டியல் நூல்கள்
- சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தைத் தெளிவாகக் கூறும் நூல் பன்னிரு பாட்டியல்
- சிற்றிலக்கிய வகை மொத்தம் 96
- சிற்றிலக்கிய வகை 96 என்று முதன் முதலாகக் கூறும் நூல் பிரபந்த மரபியல்
- **"பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாகத்**
  தொண்ணூற் றாறு என்னும் தொகையதாம்"

என்பது பிரபந்த மரபியல் நூற்பா

- **“தொண்ணூற் றாறு கோலப் பிரபந்தங்கள்**
  கொண்ட பிரான்” - என்று படிக்காசுப் புலவர், சிவந்தெழுந்த பல்லவராயன் உலாவில் கூறியுள்ளார்.

பாட்டியல் நூல்கள் வருமாறு:

| நூல் | ஆசிரியர் | சிற்றிலக்கிய எண்ணிக்கை |
|---|---|---|
| 1. பன்னிரு பாட்டியல் | 12 பேர் | 62 |
| 2. வெண்பாப்பாட்டியல் | குணவீர பண்டிதர் | 52 (+1) |
| 3. நவநீதப் பாட்டியல் | நவநீத நாடனார் | 45 |
| 4. பிரபந்த மரபியல் | பெயர் தெரியவில்லை | 96 |
| 5. சிதம்பரப் பாட்டியல் | பரஞ்சோதியார் | 59 |
| 6. பிரபந்த தீபிகை | முத்துவேங்கட சுப்பையர் | 77 |
| 7. வரையறுத்த பாட்டியல் | பெயர் தெரியவில்லை | இல்லை |

- ஐந்திலக்கணங்களையும் கூறிப் பாட்டியல் கருத்துகளையும் கூறுவன

| நூல் | ஆசிரியர் | சிற்றிலக்கிய எண்ணிக்கை |
|---|---|---|
| 8. இலக்கண விளக்கப்பாட்டியல் | வைத்தியநாத தேசிகர் | 63 + 1 |
| 9. தொன்னூல் விளக்கம் | வீரமா முனிவர் | 35 |
| 10. முத்துவீரியப் பாட்டியல் | முத்து வீரிய உபாத்யாயர் | 90 |

| நூல் | ஆசிரியர் | சிற்றிலக்கிய எண்ணிக்கை |
|---|---|---|
| 11. சுவாமிநாதப் பாட்டியல் | சுவாமிக் கவிராயர் | 37 |

- வெண்பாப் பாட்டியலின் வேறு பெயர் வச்சணந்தி மாலை.
  நவநீதப் பாட்டியலின் வேறு பெயர் கலித்துறைப் பாட்டியல்
  வரையறுத்த பாட்டியலின் வேறு பெயர் சம்பந்த பாட்டியல்
- பாட்டியல் நூலில் முற்பகுதியில் இருப்பது பொருத்தங்கள்
  பாட்டியல் நூலின் பிற்பகுதியில் இருப்பது சிற்றிலக்கியங்கள்
- மங்கலப் பொருத்தத்தை மட்டும் வரையறுத்துக் கூறும் நூல் வரையறுத்த பாட்டியல்
- சிற்றிலக்கிய வகைகளைக் கூறாத பாட்டியல் நூல் வரையறுத்த பாட்டியல்
- முழுமையாகச் செய்யுள் இலக்கணங்களையும் பாட்டியல் கருத்துகளையும் கூறும் நூல் சிதம்பர பாட்டியல்
- பதினெண் மேற்கணக்கிற்கு இலக்கணம் கூறும் நூல் பன்னிரு பாட்டியல்
- பன்னிரு பாட்டியல் என்பது இலக்கிய வகைக்கு இலக்கணம் கூறும் நூல்
- பன்னிரு படலம் என்பது புறப்பொருள் இலக்கண நூல், புறப்பொருள் வெண்பா மாலைக்கு முதல் நூல்.
- சிற்றிலக்கிய நூலாசிரியர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் குமரகுருபரர், சிவப்பிரகாசர், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

- சிற்றிலக்கிய வேந்தர் குமரகுருபரர்
- பெரும்பாலான சிற்றிலக்கியங்கள் சைவ சமயத்தைச் சார்ந்தவை ஆகும்.

## பரணி

- போர்க்களத் தெய்வமான கொற்றவையைப் பாடும் நூல்
- தொல்காப்பியப் புறத்திணைகளான களவேள்வி, களவாழ்த்து, முன்தேர்க்குரவை, பின்தேர்க் குரவை போன்றன அடிப்படை
- **ஆனை ஆயிரம் அமரிடை வென்ற**

  மான வனுக்கு வகுப்பது பரணி

  என்பது இலக்கண விளக்கப் பாட்டியல் நூற்பா.
- பரணி என்பது ஒரு நட்சத்திரம் (நாள்)
- பட்டத்து யானை பிறந்த நாள் பரணி

  காளிக்கு உரிய நாள் பரணி

  எமனுக்கு உரிய நாள் பரணி

  தன்கண் பிறந்தவனை உயர்த்துவது பரணி

  போர்க் களத்தில் பரண் மேல் நின்று பாடுவது பரணி

  எனப் பெயர்க் காரணம் கூறுவர்.
- தோற்றோரால் பெயர் பெறும் ஒரே சிற்றிலக்கியம் பரணி
- பகை அரசனுடைய நாட்டில் போர்க்களம் அமைத்துப் போர் செய்து வெல்வதால், பரணி அங்கே பாடுவதாகக் கொண்டு தோற்ற நாட்டுப் பெயரால் நூலுக்குப் பெயர் வைப்பது மரபு.
- பரணி 13 உறுப்புகளை உடையது

  கடவுள் வாழ்த்து, கடைத் திறப்பு, காடு பாடியது, கோவில் பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது, இந்திர

சாலம், இராச பாரம்பரியம், பேய்முறைப்பாடு, அவதாரம், காளிக்குக் கூளி கூறியது, போர் பாடியது, களம் பாடியது ஆகியன

- இந்திர சாலம் என்பது மாய வித்தை, அதாவது மாயாஜாலம்
- இராச பாரம்பரியம் என்பது மன்னனின் முன்னோர்களைச் சுட்டுவது
- அவதாரம் என்பது மன்னனின் பிறப்பைக் கூறுவது
- வீரச்சுவை உடைய நூல் பரணி
- இதன் கடைத் திறப்புப் பகுதி மட்டும் காமச்சுவை உடையது
- விண், மண், நரகம் என்ற மூன்றையும் பாடுவது பரணி
- இரண்டடித் தாழிசையால் பாடப்படுவது பரணி
- தனியே ஒரு போர் பற்றி எழுந்த பெரு நூல் பரணி
  தனியொரு போர்பற்றி எழுந்த சிறு நூல் களவழி நாற்பது
- முதல் பரணி நூல் கலிங்கத்துப் பரணி *
- முதலாம் குலோத்துங்கனின் படைத் தளபதி கருணாகரத் தொண்டைமானுக்கும் கலிங்க மன்னன் அனந்தவர்ம சோடகங்கனுக்கும் (அனந்தவர்மன்) நடந்த போர் பற்றிக் கூறுவது கலிங்கத்துப் பரணி
- பரணி பாடுவதில் வல்லவர் ஜெயங்கொண்டார்

| நூல் | ஆசிரியர் | பாடப்பட்டோர் |
|---|---|---|
| கலிங்கத்துப் பரணி | ஜெயங்கொண்டார் | கருணாகரத் தொண்டைமான் போர் |
| தக்கயாக பரணி | ஒட்டக்கூத்தர் | வீரபத்திர தேவர் |
| கொப்பத்துப் பரணி | பெயர் | - |

| நூல் | ஆசிரியர் | பாடப்பட்டோர் |
|---|---|---|
| | தெரியவில்லை | |
| கூடல் சங்கமத்துப் பரணி | பெயர் தெரியவில்லை | 2ஆம் ராசேந்திரன் |
| அஞ்ஞானவதைப் பரணி | தத்துவராயர் | - |
| மோகவதைப் பரணி | தத்துவராயர் | - |
| பாசவதைப் பரணி | வைத்தியநாத தேசிகர் | - |
| சீனத்துப் பரணி | மு.பி.பாலசுப்பிரமணியன் | இந்தியர் |
| திராவிடத்துப் பரணி | இராசைக் கவிஞர் | திராவிடர் |
| வங்கத்துப் பரணி | அரங்க சீனிவாசன் | இந்தியர் |
| புரட்சித் தலைவி போர்ப் பரணி | அக்கினிபுத்திரன் | ஜெயலலிதா |

(வென்றோரால் பெயர் பெற்ற பரணி திராவிடத்துப் பரணி, புரட்சித் தலைவி போர்ப் பரணி)

## பிள்ளைத் தமிழ்

- பெரியவர்களைக் குழந்தையாகப் பாவித்துப் பாடும் இலக்கியம்
- பிள்ளைக் கவி, பிள்ளைப் பாட்டு என்ற பெயர்களும் உண்டு
- "குழவி மருங்கினும் கிழவதாகும்" என்ற தொல்காப்பிய இலக்கணத்தால் சுட்டப்படும் இலக்கியம் பிள்ளைத் தமிழ்
- குழந்தையின் மூன்றாம் மாதம் முதல் பாடப்படும்
- ஒற்றைப் படை மாதத்தில் (3, 5, 7, 9....) 21 மாதம் வரைப் பாடப்படும்

- ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இருவகை உண்டு
- ஆணுக்குப் பதினாறு வயது வரை பாடலாம்
- பெண்ணுக்கு பூப்புத் தொடங்கும் வரை பாடலாம்
- அரச குமாரர்களுக்கு முடி சூட்டிய பிறகு பாடக்கூடாது
- பிள்ளைத் தமிழ் பாட முடியாமல் விலக்கப்பட்ட ஒரே கடவுள் சிவன்
- 10 பருவங்களைக் கொண்டது பிள்ளைத் தமிழ்
- பருவத்துக்குப் பத்துப் பாடல்களாக 100 பாடல்களைக் கொண்டது
- காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி - இவ் ஏழு பருவமும் இருபாற்கும் பொது
- சிற்றில் சிதைத்தல், சிறுதேர் உருட்டல், சிறுபறை கொட்டல் என்ற மூன்றும் ஆண்பாற் பிள்ளைத் தமிழில் இறுதிப் பருவங்களாக அமையும்.
- கழங்கு, அம்மானை (அ) நீராடல், ஊசல் என்ற மூன்றும் பெண்பாற் பிள்ளைத் தமிழில் இறுதிப் பருவங்களாக அமையும்.
- காப்புப் பருவத்தில் பெரும்பாலும் வேண்டப்படும் தெய்வம் திருமால்
- செங்கீரை என்றால் தண்டுக்கீரை
- தால் என்றால் தாலாட்டு
- சப்பாணி என்றால் கைகொட்டுவது
- அம்புலி என்றால் நிலவு

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

- அம்புலிப் பருவம் பாடுவது கடினம்
- 'புலவர்க்கு அம்புலி புலியாம்' என்பர்
- சாம, தான, பேத, தண்டம் என்ற நான்கும் அமையப் பாடுவது அம்புலிப் பருவம்
- ஆசிரிய சந்த விருத்தத்தில் (16 சீர்) பாடப்படுவது பிள்ளைத் தமிழ்
- பிள்ளைத் தமிழின் முன்னோடி பெரியாழ்வார்
- கண்ணனைக் குழந்தையாகப் பாவித்துப் பாடியவர்கள் பெரியாழ்வார், பிற்காலத்தில் பாரதியார்
- இராமனைக் குழந்தையாகப் பாவித்துப் பாடியவர் குலசேகர ஆழ்வார்
- முதல் பிள்ளைத் தமிழ் குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ்
- பிள்ளைத் தமிழ் ஆயினும் பெரிய தமிழ் என்று சிறப்பிக்கப்படுவது திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ்

**நூல்கள்**

**ஒட்டக்கூத்தர்** - குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ்

**குமரகுருபரர்** - மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

**பகழிக் கூத்தர்** - திருச்செந்தூர்முருகன் பிள்ளைத்தமிழ்

**அழகிய சொக்கநாதர்** - காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ்

**சிவஞான முனிவர்** - அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்

**மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை** - சேக்கிழார் பிள்ளைத் தமிழ் (இதன் கடவுள் வாழ்த்து திருத்தொண்டர் பற்றியது)

**இளங்கண்ணன்** - மூகாம்பிகைப் பிள்ளைத் தமிழ்

**சிங்கார வேலன்** - பெரியார் பிள்ளைத் தமிழ்

**கே.எம். பாலசுப்பிரமணியன்** - திருவள்ளுவர் பிள்ளைத் தமிழ்

**அன்பானந்தம்** - மறைமலையடிகள் பிள்ளைத்தமிழ்

**அ.ம.சண்முகசுந்தரம்** - அறிஞர் அண்ணா பிள்ளைத்தமிழ், கருணாநிதி பிள்ளைத்தமிழ், காமராஜர் பிள்ளைத்தமிழ்

**புலமைப் பித்தன்** - பாவேந்தர் பிள்ளைத் தமிழ்

**தேவராசன்** - பாவேந்தர் பிள்ளைத் தமிழ்

**வெள்ளியங்கிரி** - பாரதி பிள்ளைத் தமிழ்

**கனகராஜ்** - கம்பன் பிள்ளைத் தமிழ்

**ராய.சொக்கலிங்கம்** - காந்தி பிள்ளைத் தமிழ்

**குற்றாலம்** - இயேசுநாதர் பிள்ளைத் தமிழ்

**சண்முகம்** - வீரமா முனிவர் பிள்ளைத் தமிழ்

- மிகுதியான நூல்கள் தோன்றிய சிற்றிலக்கிய வகை பிள்ளைத் தமிழ்

மேற்கோள்

- **"பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட பாடிய கவிவலவ" - சேக்கிழார் பிள்ளைத் தமிழ்**

## தூது

- "காமம் மிக்க கழிபடர் கிளவி" என்ற தொல்காப்பிய அடியின் அடிப்படையில் தோன்றிய இலக்கியம் தூது
- "தொடை (மாலை) வாங்கி வா" என்று கூறும் இலக்கியம் தூது

- கலிவெண்பாவால் பாடப்படுவது
- கலிவெண்பாவில் கலித்தளையும் வெண்டளையும் கலந்து வரும்
- தூது இலக்கியத்திற்கு, வாயில் இலக்கியம், சந்து இலக்கியம் என்ற பெயர்களும் உண்டு
- தூது, அகத்தூது, புறத்தூது என இருவகைப்படும்.
- **“ஓதல் பகையே தூதிவை பிரிவே”**

  **“ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன”**

  எனத் தொல்காப்பியர் புறத்தூது குறித்துக் கூறியுள்ளார்.

  அகத்தூதில் தலைவியே தலைவனிடம் தூது அனுப்புவாள்.
- சங்க இலக்கியத்தில் தலைவன் தலைவியிடம் தூது அனுப்புவதும் உண்டு
- நாயன்மார்களும் ஆழ்வார்களும் தூதுப் பாடல் பாடியுள்ளனர்;
- இராமாயணத்தில் இராமன் சீதைக்கு அனுப்பிய அனுமான் தூது
- சிலப்பதிகாரத்தில் மாதவி கோவலனுக்கு அனுப்பிய வயந்த மாலை தூது, கோசிகமாணி தூது
- சீவக சிந்தாமணியில் குணமாலை சீவகனுக்கு அனுப்பிய கிளிவிடு தூது
- பெரியபுராணத்தில் சுந்தரர் பரவையாருக்கு அனுப்பிய இறைவன் தூது
- நளவெண்பாவில் நளன் தமயந்திக்கு அனுப்பிய அன்ன விடு தூது

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

## இலக்கியத்தில் வரும் புறத்தூதுகள்

- அதியமான் தொண்டைமானிடம் அனுப்பிய ஔவை தூது
- பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழனிடம் அனுப்பிய அன்னச் சேவல் தூது
- முருகன் சூரபதுமனிடம் அனுப்பிய வீரவாகுத் தேவர் தூது
- இராமன் இராவணனிடம் அனுப்பிய அங்கதன் தூது
- பாண்டவர் துரியோதனிடம் அனுப்பிய கண்ணன் தூது
- தேம்பாவணியில் வரும் சூசைப்பரின் விண்ணவத் தூது
- முதல் தூது நூல் நெஞ்சுவிடு தூது
- சிறந்த தூது நூல்கள் அழகர் கிள்ளை விடு தூது, தமிழ்விடு தூது

## நூல்கள்

**உமாபதி சிவாச்சாரியார்** - நெஞ்சுவிடு தூது

**பலபட்டடை சொக்கநாத புலவர்** - அழகர் கிள்ளைவிடு தூது

**பத்மகிரியார்** - தென்றல் விடு தூது

**சுப்பிரதீபக் கவிராயர்** - கூளப்ப நாயக்கன் விறலி விடுதூது

**கச்சியப்ப முனிவர்** - வண்டுவிடு தூது

**அமிர்தம் பிள்ளை** - தமிழ்விடு தூது

**ஆசிரியர் பெயர் தெரியாதது** - தமிழ் விடு தூது

**மீனாட்சி சுந்தரம் பிள்ளை** - தசவிடு தூது

**வெள்ளை வாரணம்** - காக்கைவிடு தூது

- தலைவன் தலைவிக்கு அனுப்பியது விறலிவிடு தூது

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

- ஆசிரியர் பெயர் தெரியாத தமிழ்விடு தூதில் தலைவி ஒருத்தி மதுரைச் சொக்கநாதரிடம் தமிழைத் தூது அனுப்புகிறாள்.

## உலா

- “ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப” என்ற தொல்காப்பிய நூற்பா அடிப்படையில் தோன்றிய இலக்கியம் உலா இலக்கியம்
- உலாவிற்குப் பவனி, பெண்பாற் கைக்கிளை என்ற வேறு பெயர்களும் உண்டு
- கலிவெண்பாவால் பாடப்படும்
- உலா வரப் பயன்படுவன தேர், குதிரை, யானை
- உலாவில் முன்னிலைப்பகுதி, பின்னிலைப் பகுதி என்ற இரு பகுதிகள் உண்டு.
- முன்னிலைப் பகுதியில் பாட்டுடைத் தலைவனின் சிறப்புக் கூறப்படும்
- பின்னிலைப் பகுதியில் ஏழு பருவப் பெண்களின் காமம் கூறப்படும்
- தசாங்கம் உலா இலக்கியத்தில் இடம் பெறும்
- தசாங்கம் என்பது பாட்டுடைத் தலைவனின் பத்து உறுப்புகளைச் சிறப்பித்தல்
- பத்து உறுப்புகள்: பெயர், நாடு, தலைநகர், மலை, ஆறு, தார் (மாலை), ஊர்தி, தேர், படை, முரசு, இதில் கருத்து வேறுபாடு உண்டு.
- பெண்களின் ஏழு பருவங்கள்

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

பேதை (வயது 5-7), பெதும்பை (8-11), மங்கை (12-13), மடந்தை (14-19), அரிவை (20-25), தெரிவை (26-36), பேரிளம் பெண் (36-40)

- பாட்டுடைத் தலைவனின் இயற்பெயர் கூறப்படும்
- ஏழு பருவப் பெண்களின் பெயர் கூறப்படாது.
- ஏழு பருவப் பெண்களும் பாட்டுடைத்தலைவன் மீது காமம் கொள்வதாகப் பாடப்படும்
- பாட்டுடைத் தலைவன் காமம் கொள்வதாகப் பாடும் மரபு இல்லை.
- பெதும்பைப் பருவம் பாடுவது கடினம்

 பேசும் உலாவிற்குப் பெதும்பை புலி

 பிள்ளைத் தமிழுக்கு அம்புலி புலி

- உலா பாடுவதில் வல்லவர் ஒட்டக்கூத்தர்
- "கோவை உலா அந்தாதிக்கு ஒட்டக்கூத்தர்"
- முதல் உலா நூல் திருக்கயிலாய ஞான உலா
- திருக்கயிலாய ஞான உலாவிற்கு ஆதி உலா, தெய்வீக உலா என்ற வேறு பெயர்களும் உண்டு
- விக்கிரம சோழன், குலோத்துங்க சோழன், ராசராச சோழன் என்ற மூன்று மன்னர்கள் மீது பாடப்பட்ட உலா மூவர் உலா.

### உலா நூல்கள்

**சேரமான் பெருமாள் நாயனார்** - திருக்கயிலாய ஞான உலா - 9 ஆம் நூற்றாண்டு

**ஒட்டக்கூத்தர்** - மூவர் உலா

**நம்பியாண்டார் நம்பி** - ஆளுடையப் பிள்ளை திரு உலாமாலை

**இரட்டையர்கள்** - ஏகம்பநாதர் உலா

**அந்தகக்கவி வீரராகவ முதலியார்** - திருவாரூர் உலா, திருக்கழுக்குன்றத்து உலா

**திரிகூடராசப்பக் கவிராயர்** - திருக்குற்றாலநாதர் உலா

**படிக்காசுப் புலவர்** - சிவந்தெழுந்த பல்லவராயன் உலா

**தத்துவராயர்** - சொக்கநாதர் உலா

**அ.கு. ஆதித்தன்** - காமராசர் உலா

**அரங்கசாமி** - தமிழன் உலா

**மருத்துவன் மறையரசன்** - பெரியார் பேருலா

- சொக்கநாதர் உலாவில் தலைவன் ஏழு நாளில் எழுவகை ஊர்தியில் உலாவர ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பருவ மகளிர் காமம் கொள்வதாகப் பாடப்பட்டுள்ளது
- திருக்குற்றாலநாதர் உலாவில் மட்டும் ஏழு பருவப் பெண்கள் காமம் கொள்வதற்குப் பதிலாக ஏழு வகை மகளிர் (தேவ மகளிர், நாக மகளிர், வித்தியாதர மகளிர், நீரர மகளிர், கானக மகளிர், வரையர மகளிர், மானுட மகளிர்) காமம் கொள்வதாகப் பாடப்பட்டுள்ளது.

## கலம்பகம்

- பல்வகைப் பாக்களையும் கலந்து பாடப்படும் சிற்றிலக்கியம் கலம்பகம்
- அந்தாதித் தொடை அமையப் பாடப்படும் சிற்றிலக்கியம் கலம்பகம்
- அகப்பொருளும் புறப்பொருளும் கலந்து பாடப்படும் இலக்கியம் கலம்பகம்

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

- சங்க இலக்கியத்துள் அகமும் புறமும் கலந்த நூல் பரிபாடல்
- கலம்பகத்தின் தொடக்கத்தில் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா, வெண்பா, கட்டளைக் கலித்துறை என்ற மூன்றும் வரிசையாக வரும்

  (கலம் - 12) + (பகம் - 6) = 18 வருவதால் கலம்பகம் எனப் பெயர் பெற்றது எனவும் கூறுவர்.
- கலம்பகத்தில் 18 உறுப்புகள் இடம் பெறும்

  புயவகுப்பு, தவம், வண்டு, அம்மானை, ஊர், ஊசல், பாண், மதங்கு, மடக்கு, கைக்கிளை, சித்து, களி, மறம், காலம், இரங்கல், சம்பிரதம், கார், தூது.
- சம்பிரதம் என்பது கண்கட்டு வித்தை
- குறம், இடைச்சி, வளைச்சி, சமூக உல்லாசம், கீரையார் போன்ற துறைகளும் இடம்பெறுவதுண்டு.
- முதலில் கலம்பகத்தின் உறுப்புகளாக இருந்த ஊசல், அம்மானை, தூது, குறம் போன்றன பிற்காலத்தில் தனிச் சிற்றிலக்கிய வகையாக வளர்ச்சி பெற்றன.
- அளவு

  1. தேவர் - 100 பாடல், 2. முனிவர் - 95 பாடல்,

  3. அரசர் - 90 பாடல், 4. அமைச்சர் - 70 பாடல்,

  5. வணிகர் - 50 பாடல், 6. வேளாளர் - 30 பாடல்
- அரசன் மீது பாடப்பட்ட 100 பாடல்களைக் கொண்ட நூல் நந்திக் கலம்பகம்
- ஒட்டுமொத்த சமுதாயத்தையும் படம்பிடித்துக் காட்டும் சிற்றிலக்கியம் கலம்பகம்

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

- கலம்பகத்தில் புறத்தைவிட அகப்பொருள் அதிகமாக வரும்
- அகப்பொருள் குறைந்த கலம்பகம் திருக்கலம்பகம்
- கலம்பகம் பாடுவதில் வல்லவர் இரட்டையர்கள்
- "கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள்"
- முதல் கலம்பகம் நந்திக் கலம்பகம்
- நந்திக் கலம்பகத்தின் பாட்டுடைத் தலைவன் மூன்றாம் நந்தி வர்மன்
- நந்திக் கலம்பகத்தில் தெள்ளாற்றுப் போர் வெற்றி மிகுதியாகப் பாடப்பட்டுள்ளது
- கலம்பகத்தால் இறந்த மன்னன் நந்திவர்மன்
- "நந்தி கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும்" என்பது சோமேசர் முதுமொழி வெண்பா பாடல்
- அறம் வைத்துப் பாடப்படும் இலக்கியம் கலம்பகம்

**நூல்கள்**

**ஆசிரியர் பெயர் தெரியவில்லை** - நந்திக் கலம்பகம்

**நம்பியாண்டார் நம்பி** - ஆளுடையப் பிள்ளையார் திருக்கலம்பகம்

**பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்** - திருவரங்கக் கலம்பகம்

**இரட்டையர்கள்** - திருவாமத்தூர்க் கலம்பகம், தில்லைக் கலம்பகம்

**குமரகுருபரர்** - காசிக் கலம்பகம், மதுரைக் கலம்பகம்

**வீரமாமுனிவர்** - திருவாரூர்க் கலம்பகம்

**உதீசித் தேவர்** - திருக்கலம்பகம்

**ஈசானதேசிகர்** - திருச்செந்தில் கலம்பகம்

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

# குறவஞ்சி

- குறவஞ்சி என்பதற்குக் குறவர் குலப் பெண் (குறத்தி) என்று பொருள்.
- "கட்டினும் கழங்கினும்" என்ற தொல்காப்பிய நூற்பாவின் அடிப்படையில் தோன்றிய இலக்கியம்
- குறம், குறத்திப் பாட்டு என்ற வேறு பெயர்களும் உண்டு.
- குறவஞ்சி ஓர் அக இலக்கிய நூல். எனினும் தலைவன் தலைவியின் பெயர் கூறப்படும்
- பாட்டுடைத் தலைவன் உலா செல்லும்போது கண்டு காதல் கொண்டு தவிக்கும் தலைவிக்குக் குறத்தி ஒருத்தி குறி சொல்வதாக அமைவது குறவஞ்சி இலக்கியம்
- குறத்தி, தலைவி, குறவன், கட்டியக்காரன், தோழி, குளுவன், புலியன் போன்றோர் இதன் கதைமாந்தர்கள்.
- கட்டியக்காரன் பாத்திரங்களை அறிமுகம் செய்வான்
- படிக்கவும் நடிக்கவும் ஏற்ற இலக்கியம் குறவஞ்சி
- முக்காலச் செய்திகளைப் பற்றிக் கூறும் இலக்கியம் குறவஞ்சி
- சேரிமொழியும் செந்தமிழ் வழக்கும் கலந்த இலக்கியம் குறவஞ்சி (பள்ளு போன்று)
- இயற்றமிழ், இசைத் தமிழ் இரண்டும் கலந்த இலக்கியம் குறவஞ்சி.
- ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, சிந்து, கண்ணி எனப் பல பாக்களும் பாவினங்களும் கலந்து பாடும் இலக்கியம் குறவஞ்சி

- கடவுள் வாழ்த்து - கட்டியக்காரன் வரவு - தலைவன் உலா - தலைவி பந்தாடுதல் - தலைவி தலைவனைக் கண்டு காமம் கொள்ளுதல் - குறத்தி வருதல் - மலைவளம் கூறுதல் - குறி சொல்லல் - பரிசு பெறுதல் - சிங்கன்சிங்கி உரையாடல் - வாழ்த்து போன்ற பகுதிகள் இடம்பெறும் இலக்கியம்.
- முதல் குறவஞ்சி நூல் திருக்குற்றாலக் குறவஞ்சி

நூல்கள்

**திரிகூட ராசப்பக் கவிராயர்** - திருக்குற்றாலக்குறவஞ்சி - 18ஆம் நூற்றாண்டு

**கோட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர்** - சரபேந்திர பூபாலக் குறவஞ்சி

**வரத நஞ்சையப்பப் பிள்ளை** - தமிழரசி குறவஞ்சி

**வேதநாயக சாஸ்திரி** - பெத்தலேகம் குறவஞ்சி

**தஞ்சைவாணன் (துரை-சீனிவாசன்)** - கூட்டுறவுக் குறவஞ்சி

**குமரகுருபரர்** - மீனாட்சிக் குறம்

**விசுவநாத சாஸ்திரி** - வண்ணக் குறவஞ்சி, நகுமலைக் குறவஞ்சி

- குறவஞ்சி இலக்கியத்திற்கு முன்னோடி/அடிப்படை நூல் குமரகுருபரரின் மீனாட்சிக் குறம்
- மிகவும் புகழ்பெற்ற குறவஞ்சி திருக்குற்றாலக் குறவஞ்சி

## பள்ளு

- உழவர் வாழ்வைச் சித்தரிக்கும் இலக்கியம் பள்ளு
- மருதநில நூலாகக் கருதப்படும் சிற்றிலக்கியம் பள்ளு

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

- சேரிமொழியும் செந்தமிழ் வழக்கும் கலந்த நூல் (குறவஞ்சி போன்று)
- ஏசல் இடம்பெறும் இலக்கியம்
- சமயங்களைத் தாக்குவது போன்று சமயக் கருத்துகளையும் கதைகளையும் சுவையாகக் கூறுவது
- உழத்திப்பாட்டு என்றவேறு பெயரும் உண்டு
- சந்த இசை மிகுந்த நூல் பள்ளு
- கோலாட்டமாகப் பாடப்பட்டது பள்ளு என்பார் டி.கே.சி.
- முதற் பள்ளு நூல் முக்கூடற்பள்ளு, கமலை ஞான பிரகாசர் எழுதிய திருவாரூர் பள்ளு முதற்பள்ளு என்பார் ந.வீ. செயராமன்.
- முக்கூடற்பள்ளுவின் பள்ளன் பெயர் அழகர் குடும்பன்
- மூத்தபள்ளி வைணவம். இவள் முக்கூடற்பள்ளி.
- இளையபள்ளி சைவம். இவள் மருதூர்ப்பள்ளி
- தாமிரபரணி, சிற்றாறு, கயத்தாறு மூன்றும் கூடும் இடம் முக்கூடல். இன்று சீவலபேரி என்ற பெயர் வழங்குகிறது
- பொருணை ஆற்றங்கரையில் அமைந்தது முக்கூடல் என்றும் சிலர் கூறுவர்.
- நெடுமூக்கன், முத்துச்சம்பா, குதிரை வாலி போன்ற 150 வகையான நெல் வகைகளைப் பள்ளு நூல்கள் கூறுகின்றன.
- 120 வகை மீன் வகைகளையும் பள்ளு நூல்கள் கூறுகின்றன.
- முக்கூடற்பள்ளு என்ற நூலை ‘முக்கூடல் நாடகம்’ என்ற பெயரில் நாடகமாக்கியவர் சின்னத்தம்பி வேளாளர்

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

- பேதுருப் புலவர் இயற்றிய ஞானப்பள்ளு கிறித்துவச் சமயம் சார்ந்தது.
- இஸ்லாமியர் பாடாத இலக்கியம் பள்ளு.

## அந்தாதி

- அந்தத்தை ஆதியாக வைத்துப் பாடுவது அந்தாதி
- அந்தாதிக்குச் 'சொற்றொடர் நிலை' என்ற பெயரும் உண்டு
- பிற மொழிகளில் இல்லாத அமைப்பு அந்தாதி
- முதல் அந்தாதி நூல் அற்புதத் திருவந்தாதி
- அந்தாதி பாடவல்லவர் ஒட்டக்கூத்தர்

நூல்கள்

**காரைக்கால் அம்மையார்** - அற்புதத் திருவந்தாதி

**திருமழிசை ஆழ்வார்** - திருவந்தாதி

**சேரமான்பெருமாள் நாயனார்** - பொன்வண்ணத்தந்தாதி

**நம்பியாண்டார் நம்பி** - திருத்தொண்டர் திருவந்தாதி

**கம்பர்** - சடகோபர் அந்தாதி

**பிள்ளைபெருமாள் ஐயங்கார்** - திருவரங்கத்தந்தாதி

**பட்டர்** - அபிராமியந்தாதி

**இராசைக்கவிஞர்** - திருக்குறள் அந்தாதி

- உதடு ஒட்டாமல் பாடுவது நிரோட்டகம்.
- நிரோட்டமும் அந்தாதியும் சேர்ந்தது நிரோட்டக அந்தாதி
- வந்த எழுத்துக்களே பொருள் வேறுபட மீண்டும் வரும் அந்தாதி யமக அந்தாதி

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

- யமக அந்தாதி பாடியவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்
- வெண்பா (அ) கலித்துறையால் பாடப்படும் அந்தாதிகள் நூற்றந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி.
- ஒவ்வொரு பத்தும் ஒவ்வொரு சந்தத்தில் பாடப்படுவது பதிற்றுப் பத்தந்தாதி
- பதிற்றுப் பத்தந்தாதிக்குப் பல்சந்த மாலை என்ற பெயரும் உண்டு.

## கோவை

- அக இலக்கியம்
- 400 பாடல்களைக் கொண்ட இலக்கியம் கோவை
- கட்டளைக் கலித்துறையால் பாடப்படுவது கோவை
- பாட்டுடைத் தலைவன் கிளவித் தலைவன் என்ற இருவரும் இடம்பெறும் இலக்கியம் கோவை
- ஐந்திணைக்குரிய 100 துறைகளைப் பாடுவது ஐந்திணைக் கோவை அல்லது அகப்பொருள் கோவை.
- 400 பாடல்களும் ஒரு துறையாகவே அமைவது ஒருதுறைக் கோவை
- மொழி முதலில் வரும் எழுத்து ஒவ்வொன்றுக்கும் செய்யுள் பாடுவது வருக்கக் கோவை
- அகமாந்தர் இடம்பெறும் இலக்கியம் கோவை.
- பாட்டுடைத் தலைவன் இன்றிப் பாடப்பட்ட கோவை அம்பிகாபதிக் கோவை.
- முதல் கோவை பாண்டிக் கோவை. 7 ஆம் நூற்றாண்டு

- கோவை பாட வல்லவர் ஒட்டக்கூத்தர்

**நூல்கள்**

**ஆசிரியர் பெயர் தெரியவில்லை** - பாண்டிக் கோவை

**மாணிக்கவாசகர்** - திருக்கோவை. (இதற்குத் திருச்சிற்றம்பலக் கோவை என்ற பெயரும் உண்டு)

**ஒட்டக்கூத்தர்** - நாலாயிரக் கோவை, குலோத்துங்கன் கோவை

**அமிர்தகவிராயர்** - ஒருதுறைக் கோவை - நாணிக்கண் புதைத்தல் என்ற துறை

**பொய்யாமொழிப் புலவர்** - தஞ்சைவாணன் கோவை

**மீனாட்சி சுந்தரம்பிள்ளை** - சீர்காழிக் கோவை, திருவாவடுதுறைக் கோவை, குளத்தூர்க் கோவை

- இறையனார் களவியலுக்கு உரைமேற்கோளாக அமைந்த கோவை பாண்டிக் கோவை
- நம்பி அகப்பொருளுக்கு உரை மேற்கோளாக அமைந்த கோவை தஞ்சைவாணன் கோவை

## சதகம்

- சதகம் என்றால் 100 பாடல்களைக் கொண்டது என்று பொருள்.
- நீதிக் கருத்துகள் மிகுந்த சிற்றிலக்கியம் சதகம்.
- முதன்முதலில் திருவாசகத்தில் ‘திருச்சதகம்’ என்ற சொல்லாட்சி வருகிறது.

- பழமொழிகள், பழங்கதைகள், நீதிகள், ஜோதிடக் குறிப்புகள், உடலியல் கருத்துகள், உளவியல் கருத்துகள் மிகுந்த இலக்கியம் சதகம்.
- சதகம் ஆசிரிய விருத்தத்தில் பாடப்படும்.

நூல்கள்

**ஆத்மநாத தேசிகர்** - சோழ மண்டலச் சதகம்

**ஐயன்பெருமாள்** - பாண்டி மண்டலச் சதகம்

**படிக்காசுப் புலவர்** - தொண்டை மண்டலச் சதகம்

**கார்மேகக் கவிஞர்** - கொங்கு மண்டலச் சதகம்

**அம்பலவாணக் கவிராயர்** - அறப்பளீச்சுரச் சதகம்

**குருபாத தாசர்** - குமரேச சதகம், அரபிச் சதகம்

**சதாசிவம் பிள்ளை** - ஏசுநாதர் திருச்சதகம்

## மடல்

- மடல் என்பது பனையின் கருக்கைக் குறிக்கும்.

அது ஆகுபெயராக பனை மடலால் ஆன குதிரைக்கு ஆகியது.

கருவியாகு பெயர். மடல் ஏறுதல் என்பது ஈறு குறைந்து மடல் என நிற்கிறது.

- கலி வெண்பாவால் பாடப்படும்
- மடல் ஏறுதல் பெருந்திணைக்குரியது
- மடல் ஏறுதல் பெண்ணுக்கில்லை
- பெண் மடல் ஏறுவதாக அமைந்த நூல்கள் சிறிய திருமடல், பெரிய திருமடல்

- மடல் பற்றிக் கூறும் பழந்தமிழ் நூல்கள் தொல்காப்பியம், குறுந்தொகை, கலித்தொகை, திருக்குறள், வளையாபதி
- முதல் மடல் நூலைப் பாடியவர் திருமங்கையாழ்வார்.

நூல்கள்

**திருமங்கையாழ்வார்** - சிறிய திருமடல், பெரிய திருமடல்

**காளமேகப் புலவர்** - சித்திர மடல்

**காளிமுத்தம்மை** - வருண குலாதித்தன் மடல்

**பெத்தண்ண தளவாய்** - எட்டயபுர ஜமீன்தார் உலா மடல்

- உலாவும் மடலும் சேர்ந்து உலா மடல் என்ற சிற்றிலக்கியம் தோன்றியது
- காமச் சுவையும் கவிச் சுவையும் மிகுந்த மடல் வருண குலாதித்தன் மடல்.

## மாலை

- ஒரு பொருள் குறித்த பல கருத்துகளைப் பல வகைச் செய்யுளில் பாடுவது மாலை
- அந்தாதியாகப் பாடப்படும் (கலம்பகம் போன்று)
- வெண்பா, கட்டளைக் கலித்துறை அல்லது வெண்பா, ஆசிரிய விருத்தத்தால் பாடுவது இரட்டை மணிமாலை.
- வெண்பா, கலித்துறை, ஆசிரிய விருத்தத்தால் பாடுவது மும்மணி மாலை
- வெண்பா, கலித்துறை, அகவல், விருத்தத்தால் பாடுவது நான்மணிமாலை.
- ஒரே பாவகையாலோ பல பாவகையாலோ ஒன்பது பாடல் பாடுவது நவமணிமாலை.

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

- பல பாக்களில் சந்தத்துடன் பாடுவது பல்சந்த மாலை
- மொழி முதல் எழுத்துக்கு ஒவ்வொன்றுக்கும் ஒரு பாடல் பாடுவது வருக்கமாலை
- தென்றலைப் பல பாடலில் பாடுவது வசந்தமாலை
- கோடையைப் பல பாடலில் பாடுவது வேனில் மாலை
- முதல் மாலை - திரு இரட்டை மணிமாலை

## நூல்கள்

**காரைக்கால் அம்மையார்** - திருஇரட்டை மணிமாலை

**கபிலதேவ நாயனார்** - மூத்த நாயனார் திருஇரட்டை மணிமாலை

## நூலும் பாவும்

| நூல் | பா வகை |
|---|---|
| பரணி | 2அடி தாழிசை |
| பிள்ளைத்தமிழ் | 16 சீர் ஆசிரிய விருத்தம் |
| தூது, உலா, மடல் | கலிவெண்பா |
| கோவை | கட்டளைக் கலித்துறை |